RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 11 | ஜனவரி.16 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# "எல்லோருக்கும் எல்லாம்": சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை: ஜன.16-

எல்லாருக்கும் எல்லாம் என்ற சமத்துவ நிலையை அடைய திராவிட மாடல் அரசு செயல்படுவதாக சமத்துவ பொங்கல் விழாவில் கலந்துகொண்ட முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள தலைமை செயலகத்தில் அனைத்துத் துறை பணியாளர்கள் சார்பில் சமத்துவ பொங்கல் இன்று கொண்டாடப்பட்டது. இதில் நமது பாரம்பரிய உடையான பட்டு வேட்டி, சட்டையுடன் கலந்து கொண்ட முதல்வர் ஸ்டாலின், அரசு பணியாளர்களுக்கு பொங்கலை வழங்கி தனது மகிழ்ச்சி மற்றும் வாழ்த்துக்களை பகிர்ந்துகொண்டார்.

தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் ஸ்டாலின், "எல்லாருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கி சமத்துவ நிலையை அனைவரும் அடைந்திட வேண்டும் என்ற நோக்கத்தோடு, நமது திராவிட மாடல் அரசு பணியாற்றி வருகிறது. அதற்காக கடினமாக அரசு தொடர்ந்து உழைத்துக் கொண்டு இருக்கிறது.

இந்த திராவிட மாடல் அரசுக்காக அரசு பணியாளர்கள் நேரம் காலமின்றி கடினமாக உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பணியாளர்களுடன் இன்றை தினம் சமத்துவ பொங்கல் கொண்டாடுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.







■ தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குடும்பத்துடன் சந்தித்து, பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.

# ஜனநாயகன் விவகாரம்: ஐகோர்ட்டை நாட தயாரிப்பு நிறுவனத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, ஜன.16-

விஜய் நடித்துள்ள 'ஜன நாயகன்' திரைப்படத்தை வெளியிட தணிக்கைச் சான்றிதழ் வழங்கக் கோரியும் சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைக்க கோரியும் திரைப்படத்தின் தயாரிப்பு நிறுவனம் சார்பில் அண்மையில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு இன்று விசாரணைக்கு வந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தை நாடுமாறு தயாரிப்பு நிறுவனத்திடம் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.




தவெக தலைவரான நடிகர் விஜய் நடித்துள்ள படம் 'ஜனநாயகன்'. கேவிஎன் நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்தை ஹெச்.வினோத் இயக்கியுள்ளார். ஜனவரி 9ம் தேதி உலகம் முழுவதும் பஇந்த டத்தை வெளியிட திட்டமிட்டிருந்தனர். இதற்கான தொடக்ககட்ட பணிகள் நடந்துவந்தன. டிக்கெட் முன்பதிவும் தெடங்கி நடந்து வந்தது. அந்த சூழலில் இப்படத்துக்கு தணிக்கை சான்று கிடைப்பதில் சிக்கல் நீடித்தது. இதையடுத்து தயாரிப்பு நிறுவனம் உயர் நீதிமன்றத்தை நாடியது. இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி பி.டி.ஆஷா, ஜனநாயகன் படத்தை மறுஆய்வு குழுவுக்கு பரிந்துரை செய்த தணிக்கை வாரிய தலைவரின் உத்தரவை ரத்து செய்தார். அதையடுத்து தணிக்கை வாரியத்தின் சார்பில் தனி நீதிபதி பி.டி.ஆஷா பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா தலைமையிலான அமர்வு, தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதித்தது. மேலும் இந்த மேல்முறையீட்டு வழக்கை ஜன. 20ம் தேதிக்கு தள்ளிவைத்து, பதில் மனு தாக்கல் செய்யுமாறு தயாரிப்பு நிறுவனத்துக்கு உத்தரவிட்டது. சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா தலைமையிலான அமர்வு பிறப்பித்த உத்தரவை எதிர்த்து படத் தயாரிப்பு நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தது. இந்த மனு இன்று (ஜன.15) விசாரணைக்கு வந்தது. உச்ச நீதிமன்றம் தெரிவித்தது என்ன? ஜனநாயகன் படத்துக்கு தணிக்கை சான்று வழங்க கோரிய மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், மனுதாரர் தரப்பு மீண்டும் உயர் நீதிமன்றத்தை நாடலாம் என தெரிவித்தது. ஏற்கனவே சென்னை உயர் நீதிமன்றத்தில் தணிக்கை சான்று விவகாரத்தில் தயாரிப்பு நிறுவனம் 'அவசரம் காட்டுவதாக' விமர்சித்த உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்பே இது தொடர்பான வாதங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த வழக்கு முழுமையாக விசாரிக்கப்படும் வரை படத்தின் தணிக்கை சான்றிதழை நிறுத்தி வைக்குமாறு மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# "திமுக ஆட்சி எப்போது போகும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்" : பொங்கல் விழாவில் பழனிசாமி பேச்சு

மேட்டூர்: ஜன.16-

"எங்களது கூட்டணி வலிமையான கூட்டணி. சில கட்சிகள் வரும், இவற்றையெல்லாம் பகிரங்கமாக கூற முடியாது. வலிமையான கட்சிகள் ஒன்று சேர்ந்து தேர்தலை சந்திக்க இருக்கிறோம். திமுக ஆட்சி எப்போது போகும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

ஒவ்வொரு பொங்கல் திருநாள் அன்றும், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி ஒவ்வொரு தொகுதியாக சென்று பொங்கல் திருவிழாவில் கலந்து கொள்வது வழக்கம். அந்த வகையில், நடப்பாண்டில், மேட்டூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட மேச்சேரி அருகே காரப்பட்டி பள்ளம் பகுதியில் சேலம் புறநகர் மாவட்ட அதிமுக சார்பில் பொங்கல் திருவிழா இன்று (15ம் தேதி) நடந்தது.

இந்த விழாவில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி கலந்து கொண்டு, காளை மாடுகள் பூட்டிய மாட்டு வண்டியில் 1 கிலோ மீட்டர் தூரம் ஊர் வலமாக அழைத்து வரப்பட்டு, அப்பகுதியில் உள்ள மாரியம்மன் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். பின்னர், 108 பானைகள் கொண்டு நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டு ஒயிலாட்டம், பொம்மலாட்டம், வள்ளி கும்மி கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். தொடர்ந்து, மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



இதனைத் தொடர்ந்து அவர் பேசியதாவது: இந்த ஆண்டு நடக்கப்போகிற சட்டபேரவை தேர்தலில் நிச்சயம் வழி பிறக்கும். தமிழகத்தில் 60% பேர் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். இளைஞர்கள், மாணவர்கள் பள்ளி கல்லூரிகளில் தைத் திருநாளை மிகச்சிறப்பாக கொண்டாடுகிறார்கள். எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் மறைவுக்குப் பிறகும், அதிமுக ஆட்சிக்காலத்திலும் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி கொடுத்திருக்கிறோம்.

அனைத்து தரப்பு மக்களும் மகிழ்ச்சியாக வாழ்ந்த காலம் அதிமுக காலம். திமுக ஆட்சி எப்போது போகும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். எங்கள் கூட்டணியில் அதிமுக, பாஜக, பாமக, இன்னும் சில கட்சிகள் சேரப்போகின்றன. இது வெற்றிக் கூட்டணி, நம் கூட்டணி வரும் தேர்தலில் ஆட்சியமைக்கும், அதை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது.

அதிமுக உழைப்பாளர்கள் நிறைந்த கட்சி, தொண்டர்கள் நிறைந்த கட்சி. பாஜக 3வது முறையாக நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வலிமையான ஆட்சி மத்தியில் நடக்கிறது. உலகம் முழுவதும் பாராட்டப்படக்கூடிய பிரதமராக மோடி இருக்கிறார். இந்தியா பல மாநிலங்கள் கொண்ட நாடு. நாடு வளமாக சிறப்பாக இருக்க மத்தியில் இருக்கிற ஆட்சி துணை நிற்கின்றது.

பாமக முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி நம்மோடு இணைந்திருக்கிறார். மக்கள் எப்போது தேர்தல் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். திறமையற்ற முதல்வர் இருக்கிற காரணத்தினால் மக்கள் நிம்மதியாக இல்லை. அரசு பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், பகுதி நேர ஆசிரியர்கள், செவிலியர்கள் ஆகியோரின் போராட்டங்கள் இல்லாத நாளே இல்லை. ஒட்டு மொத்த மக்களும் புறக்கணிக்கிற நிலை வந்துவிட்டது. அடுத்த தை திருநாளில் ஆளும் கட்சியாக இருந்து பொங்கல் திருநாளை கொண்டாடுவோம்.

விவசாயிகள் வாங்கிய பயிர்க்கடன் அதிமுக ஆட்சியில் 2 முறை தள்ளுபடி செய்யப்பட்டது. 24 மணி நேரம் மும்முனை மின்சாரம் கொடுக்கப்பட்டது, விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளைச் செய்தோம், இந்த ஆட்சியில் விவசாயிகளுக்கு முறையாக கடன் கிடைப்பதில்லை. நமது ஆட்சியில் வறட்சி நிவாரணம் கொடுத்தோம், இழப்பீடு தொகை கொடுத்தோம்.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது. கிராமம் முதல் நகரம் வரை போதைப்பொருள் விற்பனை நடக்கிறது. பல்வேறு கொடுமைகள் நடக்கின்றன. சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்க காரணம், சட்டம் ஒழுங்கு டிஜிபி இதுவரை நியமிக்கப்படாததுதான்.

பொறுப்பு டிஜிபியை நியமித்தார்கள், அவர் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்குச் சென்றதால், இன்னொரு பொறுப்பு டிஜிபி நியமிக்கப்பட்டுள்ளார். சட்டம் ஒழுங்கு டிஜிபியை நியமிக்க முடியாத அவல ஆட்சி நடக்கிறது. இப்படி இருந்தால் எப்படி சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படும்? இந்த ஆட்சியில் எப்படி மக்களுக்கு நன்மை கிடைக்கும்?

அதிமுக தலைமையில் பலம் பொருந்திய கூட்டணி அமைக்கப்பட்டுவிட்டது. திமுக கூடடணியில் அங்கம் வகிக்கிற காங்கிரஸ் கை நழுவி போகப்போகிறது, திமுக கூட்டணியில் காங்கிரஸ் நிலைக்குமா என்ற கேள்வி வந்துவிட்டது, அதிமுகவை பொறுத்தவரை பலம் வாய்ந்த கூட்டணி. தேர்தல் நேரத்தில் திமுகவை வீழ்த்துவோம். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து, நிருபர்களிடம் அவர் கூறியதாவது: திமுக ஆட்சியில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இதனால் ஆசிரியர்கள் போராடி வருகின்றனர். வாக்குறுதிகள் கொடுத்து ஆட்சிக்கு வந்துவிட்டு வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. எங்களது கூட்டணி வலிமையான கூட்டணி. சில கட்சிகள் வரும், இவற்றையெல்லாம் பகிரங்கமாக கூற முடியாது.

வலிமையான கட்சிகள் ஒன்று சேர்ந்து தேர்தலை சந்திக்க இருக்கிறோம். காங்கிரஸ், திமுக கூட்டணியில் இருக்கிறதா வெளியேறுகிறதா என தெரியவில்லை. ஓய்வூதிய திட்டம் ஒரு நாடகம். மத்திய அரசு அளித்துள்ள இந்த திட்டத்தை பூசி நாடகமாடி இருக்கிறார்கள். முதல்வர் அரங்கேற்றியுள்ள இத்திட்டம் மத்திய அரசின் திட்டமாகும்.

தமிழக அரசு சில மாற்றங்களை செய்து புதியதாக அறிவித்திருக்கிறார்கள். திமுகவின் தேர்தல் அறிக்கையில் தெரிவித்தது போல அறிவிக்கப்படவில்லை. சில சங்கங்கள் மட்டுமே இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. பெரும்பாலான சங்கங்கள் ஆதரவு தெரிவிக்கவில்லை. எங்களை பொறுத்தவரை கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கண்ணார் தெருவை சேர்ந்த திமுக இளைஞர் அணி உறுப்பினர் அருண் காந்தி, பொங்கல் திருநாளை முன்னிட்டு தனது பகுதியில் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் தேவையை கருத்தில் கொண்டு, தன் சொந்த செலவில் 100க்கும் மேற்பட்டோருக்கு இலவசமாக சேலைகளை வழங்கினார். இந்த இலவச சேலை வழங்கும் நிகழ்ச்சி மானாமதுரை கண்ணார் தெருவில் நடைபெற்றது. இதில் அந்த பகுதியை சேர்ந்த பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சேலைகளை பெற்றனர். இந்நிகழ்ச்சியில் திமுக நகர செயலாளர் பொன்னுசாமி, மானாமதுரை நகராட்சி துணைத் தலைவர் பாலச்சுந்தரம் மற்றும் திமுக நிர்வாகிகள் ரவிச்சந்திரன், பாலையா, மாரிமுத்து, பன்னீர் செல்வம், ராசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# பம்மலில் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்ஃபர் டிரஸ்ட் சார்பில் 7ஆம் ஆண்டு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது











செங்கல்பட்டு, ஜன.16-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மலில் 21/12/2025 அன்று கம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்ஃபர் டிரஸ்ட் 7ஆம் ஆண்டு விழா நிகழ்ச்சியில் பரதநாட்டியம் கலை நிகழ்ச்சி, மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினர்கள் அவர்களுக்கு பாராட்டி விருது வழங்கப்பட்டது. ஓவிய போட்டி, ஆடல், பாடல், கர்ப்பிணி 7 பெண்களுக்கு சீமந்தம், பேட்டி சேலை மற்றும் பரிசு பொருட்கள் உணவு,தண்ணீர், ஸ்னாக்ஸ் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பம்மல் மண்டல தலைவர் வே.கருணாநிதி, காங்கிரஸ் பம்மல் பாலு, தாவேக பம்மல் டி.கந்தசாமி, கீரப்பாக்கம் தலைவர் ராஜேந்திரன், காங்கிரஸ் விஜியானந்தன் மாற்றுத்திறனாளி நல அலுவலகம் ஊழியர் சீனிவாசன், தொகுப்பாளர் அப்பாவ், லயன்ஸ் கிளப் தலைவர் செல்வ சேகர் மற்றும் ரங்கநாதன், சமூக ஆர்வலர்கள், வித்யாசாகர் மாணவர் கல்வி அறக்கட்டளை, ரூட் லேப் டிரஸ்ட் அன்னை லதா, செந்தமிழ் அறக்கட்டளை நிறுவினர் பிரவீன், சரசு கல்யாண மண்டபம் குமரன், சமூக ஆர்வலர்கள் பம்மல் நிர்மல், வினோத்,பல்லாவரம் சந்திரசேகர், கிறிஸ்டி நடன ஆசிரியர், குரோம்பேட்டை எழில், பம்மல் சத்தியமூர்த்தி, லயன்ஸ் கிளப், மற்றும் சந்திரசேகர் கிஹிஷி மிஜி கம்பெனி, கவிஞர் பொன் செல்வராசு அனகாபுத்தூர், கோவிந்தராஜன், புவனேஸ்வரி, லட்சுமி மற்றும் அறக்கட்டளையின் இயக்குனர் பம்மல் பி.கவிதா, தலைவர் பம்மல் கலா, கௌரவத் தலைவர் அருணகிரி ஐயா, செயலாளர் தேவி, கிளைச் செயலாளர் : குன்றத்தூர் பிரகாஷ், அனகாபுத்தூர் சரவணன், குரோம்பேட்டை திருநாவுக்கரசு, கீரப்பாக்கம் தனசேகர் மற்றும் சதீஷ் பாபு, மதுராந்தகம் பாஸ்கர், மாதவன், மற்றும் பாண்டியராஜன் வடசென்னை சுமித்ரா, செயற்குழு உறுப்பினர்கள், தேவி தனிகாசலம், சிவகாமி, விமலா எழில், கலைச்செல்வி, ரதி, புஷ்பா, வளர்மதி,மோகன், சௌந்தர்ராஜன், மோகனரங்கன், ஜெயக்குமார் அறக்கட்டளை ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.




# புனித மிக்கேல் பதின்ம மேல்நிலைப் பள்ளியின் 50வது ஆண்டு பொன்விழா

கோவை ஜன.16

கோவை மாவட்டம் டவுன் ஹால் பகுதியில் உள்ள புனித மிக்கேல் பதின்ம மேல்நிலைப் பள்ளியின் 50வது ஆண்டு பொன்விழா நிகழ்ச்சி

பொன்விழா கொண்டாட்டத்தின் நினைவுச் சின்னமாக 2025ஆம் ஆண்டில் பொன்விழா வளைவு அமைக்கப்பட்டு திறப்பு விழா காணப்பட்டது இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வை நினைவு கூறும் வகையில்

பொன்விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மேதகு ஆயர் டாக்டர் எல்.தாமஸ் அக்வினாஸ் தலைமையில் கூட்டுப் பாடல் திருப்பலியுடன் விழா தொடங்கியது.நிகழ்ச்சியை தொடர்ந்து மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக எம்.பி.கணபதி ராஜ் குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மாணவமாணவிகளுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கௌரவ விருந்தினர்களாக முதன்மை குரு பேரருட் எஸ்.ஜான் ஜோசப் அடிகளார்,டாக்டர் பி.ஏ. நரேஷ் மற்றும் பல்வேறு கல்வி அலுவலர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் இந்த சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் ஆரோக்கியராஜ் ஸ்டீபன், பள்ளியின் முதல்வர் ஆண்டனி,ஆரோக்கிய ததேயூஸ் மற்றும் பாலமுரளி, புனிதா அந்தோணி அம்மை, கோமதி, நந்தகுமார், சதீஷ்குமார் மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்



# மாட்டுப்பொங்கல் முன்னிட்டு காளைகளை அலங்கரித்து தயார் செய்யும் விவசாயிகள்

காவேரிப்பட்டினம், ஜன.16

தமிழர் திருநாளாம் மாட்டுப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு காவேரிப்பட்டினம் மற்றும் சுற்றுவட்டார கிராமப் பகுதிகளில் விவசாயிகள் தங்களின் காளைகளை சிறப்பு முறையில் தயார் செய்து வருகின்றனர். காளைகளுக்கு பயிற்சி அளித்து, அருகிலுள்ள குளங்கள் மற்றும் ஏரி நீர்நிலைகளில் குளிப்பாட்டி சுத்தம் செய்து, நெற்றியில் குங்குமம் இட்டு, கழுத்தில் மணி மற்றும் மலர் மாலைகள் அணிவித்து அலங்கரிக்கின்றனர்.

விவசாயத்திற்கு துணை நிற்கும் காளைகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் நடைபெறும் இந்த மாட்டுப்பொங்கல் விழா, பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பிரதிபலிப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். கிராமங்களில் இந்த நிகழ்வை காண மக்கள் திரளாகக் கூடியதால், பண்டிகை சூழல் உற்சாகமாக காணப்படுகிறது

# ஈரான் வான்வெளி மூடல்: சர்வதேச விமானப் போக்குவரத்து பாதிப்பு

## ஏர் இந்தியா மற்றும் இண்டிகோ நிறுவனங்கள் எச்சரிக்கை

டெல்லி, ஜன.16-

ஈரானில் நிலவி வரும் அசாதாரணமான சூழல் காரணமாக அந்நாட்டின் வான்வெளி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தியாவிலிருந்து இயக்கப்படும் ஏர் இந்தியா மற்றும் இண்டிகோ உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களின் சர்வதேச விமானச் சேவைகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இது தொடர்பாக ஏர் இந்தியா நிறுவனம் வெளியிட்டுள்ள பயண ஆலோசனையில், பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஈரான் வான்வெளியைத் தவிர்த்து மாற்றுப் பாதைகளில் விமானங்கள் இயக்கப்படுவதாகவும், மாற்றுப் பாதை வசதி இல்லாத இடங்களில் சில சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதேபோல் இண்டிகோ நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலில், ஈரான் வான்பரப்பைத் தவிர்த்து நீண்ட தூர மாற்றுப் பாதைகளில் விமானங்கள் இயக்கப்படுவதால் பயண நேரம் கணிசமாக அதிகரிக்கும் என்றும், இதனால் விமானங்கள் தாமதமாகக் இலக்கைச் சென்றடைய வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. எனவே, பயணிகள் விமான நிலையத்திற்குப் புறப்படுவதற்கு முன்னதாகவே தங்களது விமானத்தின் தற்போதைய நிலையை இணையதளம் வாயிலாகச் சரிபார்த்துக் கொள்ளுமாறு இரு நிறுவனங்களும் அறிவுறுத்தியுள்ளன.




விமானப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் FlightRadar24 தளத்தின் தகவல்படி, தற்போது ஈரானின் வான்பரப்பில் வணிக ரீதியான விமானங்கள் எதுவும் இயக்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் நிலவும் அரசியல் பதற்றம் காரணமாகப் பல்வேறு சர்வதேச விமான நிறுவனங்களும் ஈரானைத் தவிர்த்து பாதுகாப்பான வான்வெளிகள் வழியாகச் சுற்றுப் பாதையில் செல்வதால், உலகளாவிய விமான அட்டவணைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் இணைப்பு விமானங்களைப் பிடிக்க வேண்டிய பயணிகள் கூடுதல் காத்திருப்பு நேரத்தையும், நீண்ட பயணத்தையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தற்போதைய நிலவரத்தைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகத் தெரிவித்துள்ள ஏர் இந்தியா, ஈரானில் சூழல் சீரடைந்து வான்வெளி மீண்டும் திறக்கப்பட்டவுடன் பழைய வழித்தடங்களில் விமானங்கள் இயக்கப்படும் என்று கூறியுள்ளது. அதுவரை நிலவும் தற்காலிக மாற்றங்களுக்குப் பயணிகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என விமான நிறுவனங்கள் கேட்டுக் கொண்டுள்ளன.



■ தேனி மாவட்டம் லோயர் கேம்பில் உள்ள கர்னல் ஜான் பென்னிகுவிக் 185ஆவது பிறந்த தினத்தையொட்டி தேனி மாவட்டம் கூடலூர் நகராட்சி, லோயர் கேம்ப் பகுதியில் அமைந்துள்ள கர்னல் ஜான் பென்னிகுவிக் மணிமண்டபத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தேனி பாராளுமன்ற உறுப்பினர். தங்க தமிழ்செல்வன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு தாம்பரம் மாநகர திமுக அயலக அணியின் அமைப்பாளர் துரை. இரா.சிவக்குமார் அவர்கள் தலைமையில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மற்றும் 4வது மண்டல குழு தலைவர் டி.காமராஜ் அவர்களை சந்தித்து புதிய ஆண்டுக்கான தினசரி நாள்காட்டியை வழங்கி ஆசி பெற்றனர் இந்த நிகழ்வில் முத்துலட்சுமி நகர் மற்றும் சர்வ மங்களா நகர் கழக முன்னோடிகள், இளைஞர்கள் தா.முரளி, ஜெ.ஜெயகாந்த், வி.வெங்கட்ராமன், ஆர்.சேதுராமன், கே.சம்பத், ஆர்.ராம், ஏ.அருண்குமார், வி.யோகானந்தன், ஜி.மோகன்குமார், எஸ்.ஆர்.செந்தில் குமார், வினோத் ஆகியோர் உடன் இருந்தனர்



# காவேரிப்பட்டினத்தில் பொங்கல் பானைகள் விற்பனை மும்முரம்

## கிராமப்புற விவசாயிகள் அதிக ஆர்வம்

காவேரிப்பட்டினம், ஜன.16

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பகுதியில் தமிழர்களின் பாரம்பரிய திருநாளான பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் பானைகள் விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது. காவேரிப்பட்டினம் வார சந்தை, பேருந்து நிலையம் சுற்றுவட்டாரம் மற்றும் முக்கிய சந்தை பகுதிகளில் தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டு வண்ண வண்ணமான பொங்கல் பானைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

மண், செம்பு, பித்தளை உள்ளிட்ட வகைகளில் தயாரிக்கப்பட்டுள்ள பொங்கல் பானைகள் ரூ.50 முதல் ரூ.8,000 வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். சிறிய குடும்பங்களுக்கான பானைகளில் இருந்து பெரிய குடும்பங்கள் மற்றும் கோயில் நிகழ்ச்சிகளுக்குப் பயன்படும் பெரிய அளவிலான பானைகள் வரை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற பகுதிகளில் இருந்து வந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பாரம்பரியத்தை கடைபிடிக்கும் நோக்கில் மண் பானைகளையே அதிகம் விரும்பி வாங்கிச் சென்றனர். குறிப்பாக புதிதாக வீடு கட்டியவர்கள் மற்றும் இளைய தலைமுறையினரும் பாரம்பரிய பொங்கல் பானைகளை வாங்க ஆர்வம் காட்டியதால் விற்பனை கணிசமாக உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் நிலையில், வரும் நாட்களில் பொங்கல் பானைகளின் விற்பனை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சந்தை பகுதிகளில் மக்கள் கூட்டம் அதிகரித்துள்ளதால், வியாபாரிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.





# திருவஞ்சேரி ஊராட்சியில் பொங்கல் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது

திருவஞ்சேரி, ஜன.16

செங்கல்பட்டு மாவட்டம் புனித தோமையார் மலை ஒன்றிய உட்பட்ட திருவஞ்சேரி ஊராட்சியில் பொங்கல் விழா ஊராட்சி மன்ற தலைவர் ஜனனி சுரேஷ் பாபு தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது

இதில் கோலப்போட்டி உரிஅடித்தல் இசை நாற்காலி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றது இந்த போட்டியில் வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசுத்தொகை வழங்கப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ருக்மணி சக்தி, வார்டு உறுப்பினர்கள் எஸ்.நாகலிங்கம், சூர்யாபொன்னுவேல், செல்வி பாபுஜி, மதுசூதனன் ஊராட்சி செயலாளர் அரசு பணியாளர்கள் மகளிர் சுய உதவி குழு மற்றும் பொதுமக்கள் திமுக நிர்வாகிகளுக்கு சுமார் 500 பேருக்கு வேட்டி சேலை நலத்திட்ட உதவிகளை வாங்கினார் இதில் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இறுதியில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

# நாட்டின் பணவீக்கம் 0.83% அதிகரிப்பு

புதுடெல்லி, ஜன.16-

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் கடந்த டிசம்பரில் 0.83 சதவீதமாக அதிகரித்துள்ளது. மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படி, கடந்த 2025ம் ஆண்டு நவம்பரில் 0.32% அளவுக்குக் குறைந்து காணப்பட்ட பணவீக்கம், டிசம்பரில் 0.83% ஆக உயர்ந்துள்ளது. மொத்த விற்பனை விலை குறியீட்டுப் பட்டியலில் முக்கியப் பங்கு வகிக்கும் உற்பத்திப்பொருட்களின் பணவீக்கம்டிசம்பரில்1.82%ஆகப்பதிவாகியுள்ளது. உணவுப் பொருட்களின் விலை உயர்வு 'பூஜ்ஜியம்'சதவீதம்என்ற அளவிலேயே உள்ளது.

# தனியார் மருத்துவமனைகளில் இலவச தடுப்பூசி திட்டம்: 100% இலக்கை எட்ட சுகாதாரத் துறை நடவடிக்கை



சென்னை, ஜன.16-

தனியார் மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு இலவச தடுப்பூசி திட்டத்தை விரிவுபடுத்த சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழகத்தில் தேசிய தடுப்பூசி அட்டவணையின் கீழ் மொத்தம் 11 வகையான தடுப்பூசிகள் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. அதன்படி, காசநோய், கல்லீரல் தொற்று மற்றும் புற்றுநோய், இளம்பிள்ளை வாதம், கக்குவான் இருமல்,ரண ஜன்னி, தொண்டை அடைப்பான், இன்ஃப்ளூயன்சா தொற்று,நிமோனியா, வயிற்றுப்போக்கு, தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய், ஜப்பானிய மூளைக்காய்ச்சல், வைட்டமின் ஏ குறைபாடு உள்ளிட்ட பாதிப்புகளுக்காக தடுப்பூசிகள் போடப்படுகின்றன. இந்த திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 9.40 லட்சம் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், வட்டார மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 11 ஆயிரம் இடங்களில் அந்த தடுப்பூசிகள் அளிக்கப்படுகின்றன. முதல் தவணை தடுப்பூசிக்கு பிறகு அடுத்த தவணையை சில குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் பெற்றோர் செலுத்துவதில்லை. இதனால் 100 சதவீத தடுப்பூசி இலக்கு அனைத்து இடங்களிலும் எட்டப்படுவதில்லை.

எந்த சுகாதார மாவட்டம் தடுப்பூசி செயல்பாட்டில் பின்தங்கியுள்ளது என்பதை கண்டறிந்து, அதனை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரத் துறை மேற்கொண்டு வருகிறது. அதேநேரம் தனியார் மருத்துவமனைகளிலும் இலவச தடுப்பூசி செயல் திட்டத்தை மேம்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறுகையில், "தமிழகத்தில் தேசிய தடுப்பூசி அட்டவணையின் கீழ் வழங்கப்படும் அனைத்து தடுப்பூசிகளும் போதிய எண்ணிக்கையில் பாதுகாப்பாக இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தடுப்பூசி தவணைகள் தவறவிடப்படாமல் இருப்பதை உறுதி செய்ய தனியார் மருத்துவமனைகளிலும் இலவசமாக 11 தடுப்பூசிகளை வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் இணைந்து செயல்பட விரும்பும் தனியார் மருத்துவமனைகள், அதுகுறித்து பொது சுகாதாரத் துறைக்கு விண்ணப்பிக்கலாம். சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கு சுகாதாரத் துறை அதிகாரிகள் சென்று கட்டமைப்பு வசதிகளை ஆய்வு செய்வார்கள். அதில் திருப்தி ஏற்படும்பட்சத்தில் இலவச தடுப்பூசி திட்டத்தை சம்பந்தப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் செயல்படுத்த அனுமதி வழங்கப்படும். தடுப்பூசி மருந்துகளும் அரசு சார்பில் வழங்கப்படும். தடுப்பூசிகள் முறையாக பயன்படுத்தப்பட்டதற்கான ஆவணங்களை அரசுக்கு தனியார் மருத்துவமனைகள் அளிக்க வேண்டும். அதன் அடிப்படையில் தொடர்ந்து தடுப்பூசிகள் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்'' என்றனர்.

# தெற்குலக நாடுகளின் நலன்களுக்காக இந்தியா வலுவாக வாதிடுகிறது" சிஎஸ்பிஓசி மாநாட்டில் பிரதமர் மோடி



புதுடெல்லி. ஜன.16-

"உலகளவில் ஒவ்வொரு தளத்திலும் தெற்குலக நாடுகளின் நலன்களுக்காக இந்தியா வலுவாக வாதிட்டு வருகிறது" என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் தலைமை அதிகாரிகளின் 28வது மாநாட்டில் (சிஷிறிளிசி) இன்று உரையாற்றிய பிரதமர் மோடி, "உலகளவில் ஒவ்வொரு தளத்திலும் இந்தியா தெற்குலக நாடுகளின் நலன்களுக்காக வலுவாக வாதிடுகிறது. ஜி20 அமைப்புக்கு இந்தியா தலைமையேற்ற போது, தெற்குலக நாடுகளின் கவலைகளை அப்போது உலகளாவிய நிகழ்ச்சி நிரலில் இந்தியா பதிவு செய்தது. நாங்கள் செய்யும் எந்தவொரு கண்டுபிடிப்புகளும், ஒட்டுமொத்தமாக தெற்குலக மற்றும் காமன்வெல்த் நாடுகளுக்கு பயனளிப்பதை உறுதி செய்வதே இந்தியாவின் தொடர்ச்சியான முயற்சியாகும். தெற்குலக நாடுகளில் உள்ள நமது கூட்டாளி நாடுகளும் இந்தியாவில் உள்ளதைப் போன்ற அமைப்புகளை உருவாக்கக்கூடிய வகையில், நாங்கள் வெளிப்படையான மூல தொழில்நுட்ப தளங்களை உருவாக்கி வருகிறோம். பொது நலன் என்ற உணர்வால் உந்தப்பட்டு, நாங்கள் அனைவரையும் உள்ளடக்கிய வகையில் செயல்படுகிறோம், யாரும் பின்தங்கிவிடாமல் இருப்பதை உறுதி செய்கிறோம். இந்த அர்ப்பணிப்புதான் சமீபத்திய ஆண்டுகளில் சுமார் 25 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்க இந்தியாவிற்கு உதவியது. இந்தியாவில், ஜனநாயகம் உண்மையாகவே பலன்களை வழங்குகிறது. இந்தியாவில், ஜனநாயகம் என்பது கடைக்கோடி மக்களுக்கும் பலன்களை வழங்குகிறது. இந்தியாவின் 2024 பொதுத் தேர்தலில் சுமார் 980 மில்லியன் மக்கள் வாக்களிக்கப் பதிவு செய்திருந்தனர். 8,000க்கும் மேற்பட்ட வேட்பாளர்களும், 700க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளும் தேர்தலில் பங்கேற்றன. இந்த வாக்காளர் எண்ணிக்கை சில கண்டங்களின் மக்கள்தொகையை விடப் பெரியது. தற்போது இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும், டெல்லியின் முதல்வராகவும் பெண்கள் உள்ளனர். இந்தியாவின் ஜனநாயகம் ஆழமான வேர்களால் தாங்கப்படும் ஒரு பெரிய மரம் போன்றது. விவாதங்கள், உரையாடல்கள் மற்றும் கூட்டு முடிவெடுக்கும் நீண்ட பாரம்பரியம் இந்தியாவுக்கு உண்டு. இந்தியா ஜனநாயகத்தின் தாய் என்று அழைக்கப்படுகிறது. நமது புனித நூலான வேதங்கள் 5,000 ஆண்டுகளுக்கும் மேலான பழமையானவை. மக்கள் கூடிப் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து, விவாதங்களுக்கும் உடன்பாட்டிற்கும் பிறகு முடிவுகள் எடுக்கப்பட்ட சபைகளைப் பற்றி அவை குறிப்பிடுகின்றன" என்றார். மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் நடைபெறும் இந்த உயர்மட்ட மாநாட்டில், 42 காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த 61 சபாநாயகர்கள் மற்றும் தலைமை அதிகாரிகள் மற்றும் 4 பகுதி தன்னாட்சி பெற்ற நாடாளுமன்றங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

# மும்பை உட்பட மகாராஷ்டிராவின் 29 மாநகராட்சிகளுக்கு தேர்தல்: விறுவிறு வாக்குப்பதிவு



மும்பை, ஜன.16-

மும்பை, புனே உட்பட மகாராஷ்டிரா முழுவதும் உள்ள 29 மாநகராட்சிகளுக்கான வாக்குப்பதிவு நேற்று (ஜனவரி 15) காலை தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் பணக்கார மாநகராட்சியான மும்பை மாநகராட்சியை கைப்பற்றுவதற்காக, பாஜக தலைமையிலான மகாயுதி கூட்டணிக்கும், மீண்டும் ஒன்றுசேர்ந்த உத்தவ் தாக்கரே ராஜ் தாக்கரே சகோதரர்கள் கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதால், மும்பை மீது அனைவரின் கவனமும் குவிந்துள்ளது. மகாராஷ்டிராவின் 29 மாநகராட்சிகளில் உள்ள 893 வார்டுகளில் இருக்கும் 2,869 இடங்களுக்கான வாக்குப்பதிவு, பலத்த பாதுகாப்புடன் இன்று காலை 7.30 மணிக்குத் தொடங்கியது. மாலை 5.30 மணிக்கு வாக்குப்பதிவு முடிவடையும். மொத்தம் 3.48 கோடி வாக்காளர்கள் இந்த தேர்தலில் வாக்களிக்கின்றனர். 15,931 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இந்த மாநகராட்சி தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை ஜனவரி 16 அன்று நடைபெறும். கடைசியாக 2017ல் நடந்த மும்பை மாநகராட்சி தேர்தலில் சிவசேனா கட்சி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து, பாஜகவின் ஆதரவுடன் ஆட்சியமைத்தது. ஏக்நாத் ஷிண்டேவின் பிரிவுக்குப் பிறகு நடைபெறும் முதல் மும்பை மாநகராட்சித் தேர்தல் இது. ஆண்டுக்கு ரூ.74,400 கோடிக்கும் அதிகமான பட்ஜெட்டைக் கொண்ட மும்பை மாநகராட்சியில், நான்கு ஆண்டுகள் தாமதத்திற்குப் பிறகு தேர்தல் நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் 227 இடங்களுக்கு 1,700 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தேர்தலைக் கண்காணிப்பதற்காக மும்பை முழுவதும் 25,000க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். மகாராஷ்டிரா மாநகராட்சி தேர்தலில் வாக்களிக்கும் 3.48 கோடி வாக்காளர்களில், 1.81 கோடி பேர் ஆண்கள், 1.66 கோடி பேர் பெண்கள், மற்றும் 4,596 பேர் மூன்றாம் பாலினத்தவர் ஆவர். இந்த தேர்தலுக்கான 39,092 வாக்குச்சாவடிகளில், 3,196 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என அறிவிக்கப்பட்டுள்ளன. மகாராஷ்டிராவில் நடைபெறும் மாநகராட்சித் தேர்தல்கள் காரணமாக இந்தியப் பங்குச் சந்தைகள் இன்று (ஜனவரி 15) மூடப்பட்டுள்ளன. தேர்தல் நாளை முன்னிட்டு, தேசிய பங்குச் சந்தை (NSE) மற்றும் மும்பை பங்குச் சந்தை (BSE) உட்பட இரண்டு முக்கிய பங்குச் சந்தைகளின் வர்த்தகம் இன்று நிறுத்தப்பட்டது.



# இயற்கை தந்த வரங்களுக்கு நன்றி சொல்லும் விழா பொங்கல்" குடியரசு துணைத் தலைவர் வாழ்த்து

கோவை, ஜன.16-

பொங்கல் பண்டிகை இயற்கை தந்த வரங்களுக்கு நன்றி சொல்லும் விழா என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் கூறினார். திருப்பூர், கோவை மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்க, குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் நேற்று கோவை வந்தார்.விமான நிலையத்தில் அவரை அமைச்சர் முத்துசாமி, ஆட்சியர் பவன் குமார் கிரியப்பனவர், மாநகர காவல் ஆணையர் கண்ணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். பின்னர், சி.பி.ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சூரியனை வழிபடும் நாளாக பொங்கல் அமைந்தாலும், இயற்கை தந்த வரங்களுக்கெல்லாம் நன்றி சொல்லுகின்ற தமிழ் விழாவாகவும் அமைந்துள்ளது. உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் பொங்கல் நல் வாழ்த்துகள். இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து, நேற்று இரவு திருப்பூரில் தங்கிய குடியரசு துணைத் தலைவர், திருப்பூரில் இன்று நடைபெறும் பொங்கல் விழாவில் கலந்து கொள்கிறார். பின்னர், கோவை சிட்ரா சாலையில் உள்ள கேஎம்சிஹெச் மருத்துவமனையில் புதிய கட்டிடத் திறப்பு விழாவில் அவர் பங்கேற்கிறார். தொடர்ந்து, கொடிசியா அரங்கில் நடைபெறும் ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனையின் 50வது ஆண்டு பொன்விழா நிகழ்வில் பங்கேற்கிறார்.பின்னர், இன்று இரவு 7 மணிக்கு கோவை விமான நிலையத்தில் இருந்து டெல்லி புறப்பட்டுச் செல்கிறார்.




# பழவேற்காடு லைட்ஹவுசை பொதுமக்கள் பார்வையிட அனுமதி: காவல் இணை ஆணையர் ஆய்வு

பொன்னேரி, ஜன.16-

பொன்னேரி அருகே, பழவேற்காட்டில் இன்று பொங்கல் பண்டிகை முடிந்ததும் ஏராளமான சுற்றுலா பயணிகள் பழவேற்காடு கடற்கரைக்கு படையெடுத்து வருவர். அங்கு அவர்கள் கடலில் அல்லது ஏரியில் குளிக்க சென்றால், ஒரு உயிரிழப்புகூட ஏற்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு, திருப்பாலைவனம் காவல்துறை சார்பில், நேற்று முன்தினம் மாலை பழவேற்காட்டில் பொன்னேரி காவல் உதவி ஆணையர் சங்கர் தலைமையில் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. ஆய்வாளர் காளிராஜ் வரவேற்றார். இதில் மீன்வளம், வருவாய், வனத்துறை, தமிழ்நாடு கடலோர காவல் படை, பழவேற்காடு சுற்றுவட்டார மீனவ கிராமங்களின் நிர்வாகிகள் மற்றும் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பின்னர், ஆவடி காவல் இணை ஆணையர் சிவகுமார் பழவேற்காடு பகுதிக்கு வந்து, அங்கு மீனவர் கிராம நிர்வாகிகளுடன் கலந்துரையாடி, அதிகளவில் சுற்றுலா பயணிகள் கூடும் கடற்கரை பகுதிக்கு சென்று ஆய்வு நடத்தினார். அதைத்தொடர்ந்து, அங்குள்ள தமிழகத்தின் 2வது மிக உயரமான லைட்ஹவுசை இன்று முதல் பார்வையாளர்கள் சென்று பார்ப்பதற்கு அனுமதி வழங்கினார். இதைத்தொடர்ந்து, லைட்ஹவுசின் உச்சிவரை பார்வையாளர்கள் சென்று பார்ப்பதற்கு புதிய லிப்ட் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இந்த லிப்ட் வசதி மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் சிவகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார்.

# தொடர்ச்சியாக எல்லைக்குள் ஊடுருவ முயற்சி: பாகிஸ்தான் ட்ரோன்கள் மீது இந்திய ராணுவம் துப்பாக்கிச்சூடு



ஜம்மு, ஜன.16-

ஜம்மு காஷ்மீர் ரஜோரி மாவட்டத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு (எல்ஓசி) வழியாக நாட்டுக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் ட்ரோன்கள் மீது இந்திய ராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினர். இதுகுறித்து ராணுவ அதிகாரிகள் கூறுகையில், ''ரஜோரி மாவட்டத்தின் மஞ்சகோட் செக்டாரில் பாகிஸ்தான் ட்ரோன்கள் வட்டமடித்தன. சிறிது நேரம் இந்திய எல்லைக்குள் பறந்த அந்த ட்ரோன்களை குறிவைத்து இந்திய ராணுவம் துப்பாக்கிசூடு நடத்தியது. இதைத்தொடர்ந்து அந்த ட்ரோன்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிக்குள் தப்பிச் சென்றன" என்றனர். இந்த சம்பவம் குறித்து ராணுவத் தளபதி உபேந்திர திவேதி கூறுகையில், ''கடந்த மூன்று நாட்களாக ஜம்மு எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான் ட்ரோன்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதுகுறித்து, பாகிஸ்தான் ராணுவ நடவடிக்கை தலைமை இயக்குநரிடம் (டிஜிஎம்ஓ) கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது" என்றார். கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நவ்ஷேரா செக்டார் மற்றும் பூஞ்ச் மாவட்டத்தின் மன்கோட், சம்பா மாவட்டத்தின் ராம்கர் உள்ளிட்ட பகுதிகளில் ட்ரோன்களின் நடமாட்டம் கண்டறியப்பட்டது. முன்னதாக, வெள்ளிக்கிழமை இரவு சம்பா மாவட்டத்தின் பாலோரா கிராமத்தில் ட்ரோன் மூலம் வீசப்பட்ட இரண்டு பிஸ்டல்கள், மூன்று மேகசின்கள் மற்றும் ஒரு கையெறி குண்டு ஆகியவற்றை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர். இதேபோன்று ரஜோரியின் சிங்குஸ் பகுதியில் உள்ள துங்கா காலா எல்லை வழியாக பாகிஸ்தான் ட்ரோன்கள் நுழைந்தன. உடனடியாக விழிப்புடன் செயல்பட்ட இந்திய வீரர்கள் அதனை விரட்டியடித்தனர். பாகிஸ்தான் இத்தகைய தொடர்ச்சியான அத்துமீறல்களை அடுத்து எல்லைப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

# புளியங்குடி நகராட்சி சார்பில் பிரமாண்டமான சமத்துவ பொங்கல் கலெக்டர், எம்எல்ஏ சேர்மன், பங்கேற்பு



புளியங்குடி,ஜன, 16-

: புளியங்குடி நகராட்சி சார்பில் அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்கும் வகையில் பிரமாண்டமான முறையில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது புளியங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவிற்கு மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் தலைமை தாங்கினார் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் விஜயலட்சுமி, முன்னிலை வகித்தார். நகராட்சி ஆணையாளர் நாகராஜ் அனைவரையும் வரவேற்றார்., சதன் திருமலைகுமார், எம்எல்ஏ, மாவட்ட கல்வி அலுவலர் ரேணுகா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நகர் மன்ற தலைவர் விஜயா சவுந்திரபாண்டியன், துணை தலைவர் அந்தோணிசாமி ஆகியோர் சிறப்புரை வழங்கினர் இதில் நகராட்சி சார்பில் 51 பானைகளில் நகராட்சி ஊழியர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், தூய்மை பணியாளர்கள் என அனைத்து தரப்பினரும் இணைந்து பொங்கல் வைத்தனர். விழாவில் கலந்து கொள்ளும் மாணவர்கள், இளைஞர்கள், இளம் பெண்கள், குடும்ப பெண்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் கோலப்போட்டி, இசை நாற்காலி, ஒட்டப்பந்தயம், பாட்டிலில் நீர் நிரப்புதல், பானை உடைத்தல், நொண்டி ஓட்டம், கயிறு இழுத்தல், மிதி வண்டி மெதுவாக செலுத்தல், சிலம்பு கம்பு சுற்றுதல், ஊசியில் நூல் கோர்த்தல், உட்பட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது போட்டியில் வெற்றி பெற்ற நபர்களுக்கு ப்ரிட்ஜ், கிரைண்டர், மிக்ஸி, அயனர் பாக்ஸ் கேஸ் அடுப்பு, எல்இடி டிவி, குக்கர், உட்பட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டது. பரிசுகளை மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், நகர் மன்ற தலைவர் விஜயா சவுந்திரபாண்டியன், துணை தலைவர் அந்தோணிசாமி, நகராட்சி ஆணையாளர் நாகராஜ், மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வழங்கினர். முன்னதாக விழாவிற்கு வருகை தந்த மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர் விஜயலட்சுமி ஆகியோரை நுழைவு வாயில் இருந்து விழா மேடை வரை மாட்டு வண்டியில் அமர வைத்து நகராட்சி ஆணையாளர் நாகராஜ் வண்டியை ஒட்டி ஊர்வலமாக ஜல்லி கட்டு மாடுகளுடன் அழைத்து வந்தார்... இதற்காக பள்ளி மைதானம் கடந்த பத்து நாட்களாக நகராட்சி ஊழியர்கள் உழைப்பினால் சிறப்பான முறையில் சீரமைக்கப்பட்டுள்ளது. பள்ளி மைதானம் சமப்படுத்தப்பட்டு அனைத்து இடங்களிலும் சுத்தம் செய்யப்பட்டது. விழாவில் நகர மேற்கு பகுதி செயலாளர் நாகூர் கனி, திமுக பொதுக்குழு உறுப்பினர் பத்திரம் சாகுல் ஹமீது, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, நகர துணை செயலாளர் கருப்பசாமி, பேராசிரியர் நீலமேகம், நிர்வாகிகள் அன்புராஜன், அமராவதி கல்வி குழுமம் நிறுவனத் தலைவர் பாலசுப்பிரமணியன், செய்யது சுலைமான், மைதீன், காதர்மைதீன், சிபிஐ கட்சியை சேர்ந்தவேலு, சீனிவாசன், மதிமுக ஜாகீர் உசேன், கவுன்சிலர்கள் பொன்னுத்துரைச்சி, சித்ரா, கவிதா, லட்சுமி, அருணா தேவி, முருகன், கார்த்திகா, வள்ளி,தங்கம், காந்திமதி அம்மாள், செந்தாமரை, பிவி. பாலசுப்பிரமணியன், சங்கரநாராயணன்,அரசு பள்ளி தலைமை ஆசிரியர் மாரியப்பன், சுகாதார ஆய்வாளர் முருகன், மற்றும் அனைத்து நகர மன்ற உறுப்பினர்கள், அனைத்து கட்சி நிர்வாகிகள், நகரின் முக்கிய பிரமுகர்கள், தொழில் அதிபர்கள் ரோட்டரி லயன்ஸ் கிளப் நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மாணவர்கள், கலந்து கொண்டனர், ஏற்பாடுகளை நகராட்சி ஊழியர்கள் அலுவலர்கள் செய்து இருந்தனர் முடிவில் சேக் காதர் மைதீன் நன்றி தெரிவித்தார்





# 191 வது வட்ட அதிமுக சார்பில் சமத்துவ பொங்கல் திருவிழா

பள்ளிக்கரணை. ஜன.16

சென்னை புறநகர் மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணையில் (11.01.26) அன்று மதியம் 2 மணி அளவில் பென்ஸ் ஆர் கிட்ஸ் இன்டர்நேஷனல் ஸ்கூல், ஆசான் கல்லூரி சாலையில் அதிமுக சார்பில் 191 வது மாமன்ற உறுப்பினர், சென்னை புறநகர் மாவட்ட இணை செயலாளர், ஜே. எல். லட்சுமி நிகழ்ச்சி ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. இதில் மகளிர் காண பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு போட்டியில் வெற்றி பெற்றவளுக்கு பரிசுகளை சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கழகஅமைப்பு செயலாளர், கே. சிங்காரம் மற்றும் சென்னை புறநகர் மாவட்ட செயலாளர், கே. பி. கந்தன் தலைமையில் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் பரங்கிமலை ஒன்றிய செயலாளர், பெரும்பாக்கம் ராஜசேகர், பகுதிகழகச் செயலாளர்கள் : டி.சி. கர்ணா, வி. குமார், ஜி. எம். ஜானகிராமன், ஓ.எம்.ஆர். ரவி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாடினர். இந்த திருவிழாவில் மகளிர் அனைவரும் ஒன்றிணைந்து இரட்டை இலை வடிவில் அமர்ந்து பொங்கல் திருநாளை கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சென்னை அடுத்த நாராயணபுரத்தில் அதிமுக சார்பில் பொங்கல் திருநாளை முன்னிட்டு பொது மக்களுக்கு பரிசு

சென்னை, ஜன.16-

சென்னை புறநகர் மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட நாராயணபுரத்தில் (15.01.26) அன்று காலை 10 மணிக்கு நாராயணபுரம் பொதுமக்களுக்கு மேற்கு அண்ணா நகரில் ஆரம்பித்து வீடு வீடாக சென்று பொதுமக்களை நேரில் சந்தித்துகரும்பு மற்றும் காலண்டரை சென்னை புறநகர் மாவட்ட மகளிர் அணி இணைச்செயலாளர், சி. ஆர். சூரியபிரபா வழங்கி பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மாங்கோட்டை ஊராட்சியில் தமிழர் திருநாள் சமத்துவ பொங்கல் விழா மாவட்ட ஆட்சியர் அருணா ஐ ஏ எஸ் உத்தரவின்படி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு செந்தில் குமார் ஊராட்சி செயலாளர முருகையா கிராம நிர்வாக அலுவலர் சிந்து மற்றும் ஊர் பொதுமக்கள் சமத்துவ பொங்கல் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டன




■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மலையூர் ஊராட்சியில் தமிழர் திருநாள் சமத்துவபொங்கல் விழா மாவட்ட ஆட்சியர் அருணா ஐஏஎஸ் உத்தரவுப்படி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு செந்தில் குமார் ஊராட்சி செயலாளர் செந்தில்குமார் கிராம நிர்வாக அலுவலர் உதயசூரியன் மற்றும் ஊர் பொதுமக்கள் சமத்துவ பொங்கல் திரு நாளை வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டன

# காளையார்கோவில் அமைந்துள்ள செயின்ட் மைக்கேல் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மிகச் சிறப்பாக பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது

காளையார் கோவில் ஜன.16


சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் தமிழர் திருநாளான பொங்கலை முன்னிட்டு நடைபெற்ற இந்த விழாவில் பாரம்பரியமும், பண்பாடும், மாணவர்களின் உற்சாகமும் ஒருங்கிணைந்து காணப்பட்டது. விழாவின் ஒரு பகுதியாக பலவகையான பாரம்பரிய விளையாட்டுகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் ஏராளமான மாணவரூ மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.



இந்த விழாவில் கல்லூரியின் மதிப்பிற்குரிய Chairman, Vice Chairman மற்றும் CEO சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களுடன் இணைந்து நிகழ்ச்சிகளை ரசித்து, அவர்களின் உற்சாகத்தை பாராட்டினர். அவர்களது பங்கேற்பு விழாவிற்கு மேலும் சிறப்பை சேர்த்தது.

இந்த நிகழ்ச்சி முழுமையாக கல்லூரி முதல்வரின் தலைமையில் நடத்தப்பட்டதுடன், அனைத்து பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

மாணவர்களின் கலாச்சார விழிப்புணர்வை வளர்க்கும் விதமாகவும், ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சியை ஊக்குவிக்கும் விதமாகவும் இந்த பொங்கல் விழா அமைந்தது. பொங்கல் விழா நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் பாரம்பரிய அலங்காரங்களுடன் நடைபெற்று, அனைவரின் மனதிலும் மறக்க முடியாத இனிய நினைவாக திகழ்ந்தது.





# நிலக்கோட்டை காவல் நிலையத்தில் சமத்துவ பொங்கல் விழா

நிலக்கோட்டை, ஜன.15

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் சட்டம் ஒழுங்கு காவல் நிலையம் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் சார்பாக சமத்துவ பொங்கல் கொண்டாடினர். நிலக்கோட்டை காவல் துணை கண்காணிப்பாளர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த சமத்துவ பொங்கல் விழாவில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளர் சத்தியபிரபா மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் விமலா முன்னிலை வகித்தனர். விழாவில் தொடக்கமாக காவல் நிலையத்தில் அமைந்துள்ள விநாயகர் கோவிலில் பொங்கல் வைத்து சிறப்பு அபிஷேகம் செய்தனர். மேலும் விழாவில் கிறிஸ்தவ திருச்சபை சகோதரிகளும், இஸ்லாமிய மற்றும் இந்து சகோதரர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் விழா கொண்டாடினர். இந்நிகழ்வில் காவல் சார்பு ஆய்வாளர்கள் கலையரசன், சத்திய குமார், SSI தயாளன் சரவணன், முருகன் பாலமுருகன், லதா, சொரூபராணி பானுரேகா மற்றும் அனைத்து மகளிர் SSI தங்கநிலா, சுந்தரி, பேச்சியம்மாள் உள்ளிட்ட அனைத்து காவல் அதிகாரிகளும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் சமத்துவ பொங்கல் விழாவில் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரியில் தி.மு.க. சார்பில் 200 மகளிருக்கு எலக்ட்ரிக் ஸ்கூட்டர்கள் வழங்கிய அமைச்சர் சக்கரபாணி

கிருஷ்ணகிரி, ஜன.16

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒன்றியஅளவில்தி.மு.க.வினர் நடத்திய, பொங்கல் விளையாட்டு.போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழா, சமூக சேவகர்சங்கர்தருமன் தலைமை யில்பல்வேறு கட்சிகளை சேர்ந்த1,000 பேர் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி ஆகியவை நடந்தன. இதற்கு மாவட்ட செய லாளர் மதியழகன் எம். எல்.ஏ.தலைமை தாங்கினார்.



அமைச்சர் சக்கரபாணி கலந்து கொண்டு விளை யாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் தி.மு.க.வாக்குச் சாவடி முகவர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் 200 பேருக்கு எலக்ட்ரிக் ஸ்கூட்டர்களை வழங்கினார். தொடர்ந்துஅவர் பேசுகையில், தி.மு.க. அரசு அறி வித்த திட்டங்களு டன், அறிவிக்காத பலதிட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. வருகிற 20ந் தேதி சட்டசபை கூடுகிறது. அப் போது மேலும் பல சலுகைகளை முதல் அமைச்சர் அறிவிப்பார். வருகிற 2026ல் மீண்டும் தி.மு.க.வை ஆட்சியில் அமர வைக்கவும், முதல்அமைச்சராக மு.க.ஸ்டா லினை ஆட்சியில் அமர வைக்கவும் பாடுபட வேண் டும்.என்றார்.இதில், நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் கே வி எஸ் சீனிவாசன், அன்பரசு ஆகியோர் தலைமையில் காவேரிப்பட்டணம் மற்றும் கிருஷ்ணகிரியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது.ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன், அறிஞர், ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ்,

திமுக நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி,மாநில விவசாய அணி டேம் வெங்கடேசன், மாவட்ட பொருளாளர் கதிரவன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, காவேரிப்பட்டனம் நகர செயலாளர் சாஜித், முன்னாள் நகர செயலாளர் பாபு மற்றும்

மாநில,மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய ,நகர ,பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# போடிநாயக்கனூர் காவல் நிலையத்தில் பாரம்பரிய உடையில் சமத்துவ பொங்கல் கொண்டாட்டம்

போடி ஜன.16

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகர் காவல் நிலையத்தில் இன்றைய தினம் பண்பாளர் போடி நகர் காவல் துறை துணை கண்காணிப்பாளர் திருவாளர் சுனில் மனிதநேயமிக்கவர் மற்றும் கோபிநாத் தலைமையிலும், காவல்துறை உதவி ஆய்வாளர் கல் கிருஷ்ணவேணி, குரு கௌதம் முன்னிலையிலும், சமத்துவ பொங்கல் ஆனது பேராயர்கள், இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் பள்ளிவாசலின் அசரத் மற்றும் திமுக, அண்ணா திமுக, அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், அனைத்து கட்சி நண்பர்களும், போடி நகரின் முக்கிய பிரமுகர்களும் அனைத்து காவல் துறை நண்பர்கள், உளவுத்துறை காவல்



நண்பர்கள் உட்பட போடி நகரில் பணிபுரியும் காவல்துறையை சார்ந்த நண்பர்களும் மற்றும் பத்திரிக்கை, ஊடக நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சமத்துவ சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாகவும் காவல்துறை உங்களின் நண்பன் என்பதை நிரூபிக்கும் வகையில் போடி நகர் காவல் நிலையத்தில் சிறப்பாக பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161